1043

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக

சுதேச வாசகம்

இரண்டாம் புத்தகம்

[புதிய ஆரம்ப பாடசாலைப் பாடத் திட்டப்படி தயாரித்தது]

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.,
அவர்கள் குமாரர்
வி. சூ. சுவாமிநாதன்
தொகுத்தது.

MADRAS
1382
4948186

பதிப்பாளர்
வி. சூ. சுவாமிநாதன்
மதராஸ் : மதுரை : திருநெல்வேலி

பதிப்புரிமை]

[விலை அணு 4

First Edition Oct. 1939 D—H
Reprinted — April 1940 D—T
„ — June 1940 B—T
„ — July 1940 T—T
„ — Sep. 1940 U—T

Barathi Press, Madura.

முன்னுரை

1939-ஆம் வருஷம் வெளியிடப்பட்டுள்ள பாடத்திட்டப்படி இந்த சுதேச வாசகம் இரண்டாம் புத்தகத்தை வெளியிடலானேம். ஏற்கெனவே வெளி வந்துள்ள முதற் புத்தகத்தின் தொடர்ச்சியாக உயர்ந்த வசன நடை, புது வார்த்தைகள், கடினப்பதங்கள் முதலியவை இதில் படிப்படியாய்ப் புகுத்தப்பட்டிருக்கின்றன. இவைகள் நாட்டுப் பழக்கவழக்கங்களுக்கு உட்பட்டவைகளாகவே அமைக்கப்பட்டிருக்கின்றன. எந்தப் பாடத்திலும் அனுபவ சாத்தியமாய்ப் போதிக்கக்கூடியவைகளையும், அவைகளுக்கு அவசியமான சில புது வார்த்தைகளையும், சிரமமில்லாமல் புகட்டக்கூடிய விதத்திலேயே இப்புத்தகம் எழுதப்பட்டுள்ளது. இடையிடையே கொடுக்கப்பட்டுள்ள அப்பியாசங்கள், பிள்ளைகளின் ஞாபகசக்தியை விருத்திசெய்யவும், படித்தபாடங்களை மனத்திற்பதியச்செய்யவும், அவர்களது யோசிக்கும்சக்தியை விசாலிக்கவும் மிகவும் அனுகூலமான முறையில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

கேள்விகள் பாடங்களின் கீழ் கொடுக்கப்படவில்லை. கேள்விகள் கொடுக்கப்பட்டால் பிள்ளைகள் அந்தக் கேள்விகளுக்கு மட்டும் விடைகளைத் தயார்செய்து கொண்டுவிடுவார்கள்; அதனல் அவர்களது அறிவு விருத்தி கட்டுப்படுத்தப்படும். தவிரவும் ஆசிரியர்களும் கொடுக்கப்பட்ட கேள்விகளுக்குமட்டும் பிள்ளைகளுக்குப் பயிற்சி கொடுத்து, சமய சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு கேள்விகளைக் கேட்காமல் இருந்துவிட நேரிடும். ஆதலின் கேள்விகள் இப்புத்தகத்தில் சேர்க்கப்படவில்லை. ஆசிரியர் துணைப் புத்தகத்தில் மாதிரிக் கேள்விகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

ஒற்று இரட்டித்தல், இனவெழுத்துத் தோன்றல், வடமொழி எழுத்துக்கள், சப்தபேதங்கள் இவைகளை நன்றாய்க் கற்பிக்க, விசேஷப் பாடங்களும் அப்பியாசங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. உச்சரிப்பைச் சீர்திருத்துவதற்கு இவை இன்றியமையாதவை. இரண்டாவது வகுப்பில் பிள்ளைகள் இவைகளைத் தெரிந்து கொண்டால்தான், உச்சரிப்பிலும், எழுத்திலும் தவறுகள் ஏற்படா. விவரமாய்ப் பொருள் கூறி, உதாரணங்களுடன் விளக்கவேண்டிய வார்த்தைகள் மட்டுமே ஒவ்வொரு பாடத்திலும் தனியாய்க் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மேற்கண்ட லக்ஷியங்களை நன்குணர்ந்து, ஒவ்வொரு பாடத்தையும் 'எந்தெந்த விதங்களில் விசாலித்துக் கற்பிக்கலாம்' என்று திட்டம்போட்டுக்கொண்டு கற்பித்தல் நலம். ஒவ்வொரு பாடமும் ஆசிரியர் யுக்தம்போல் விரிவுபடுத்தத் தக்கதாகவே எழுதப்பட்டுள்ளது கவனிக்கத்தக்கது.

இவ்வாசக வரிசை வெளிவர உதவிய ஆசிரியர்க்கும், கல்வி அதிகாரிகட்கும் என் மனமார்ந்த வந்தனம்.

பதிப்பாசிரியன்.

கடவுள் துதி

("பாடுகின்ற பனுவலோர்கள்" என்ற தாயுமானவர் பாடலின் சந்தம்)

ஆதி அந்த மாய் நிறைந்த
ஜோதி எங்கள் தெய்வமே!
நீதி தந்த வேதம் நான்கும்
ஓதி நின்ற செல்வமே! 1

பாடி நின்று சிறுவர் நாங்கள்
தேடு கின்ற தெய்வமே!
நாடும் எங்கள் நாட்டம் எல்லாம்
நீடல் இன்றி நிறையுமே. 2

அறிவு வேண்டும் அடியர் நாங்கள்
அறிய வந்த தெய்வமே!
நெறியில் நின்று நிலவும் நல்ல
அறிவு தந்தே அருளுமே. 3

பள்ளிக் கூடப் பாலர் நாங்கள்
உள்ளம் உருகி அன்பினல்
மெள்ள மெள்ள நின் அருளைக்
கொள்ளத் துதிகள் செய்வமே! 4

—நா. கனகராஜ ஐயர்

தேச வணக்கம்

(கும்மி)

ஓங்கும் இமாசலம் ஒளிமுடியாம்; எங்கும்
உலவு பலநதி மாலைகளாம்;
தாங்கும் இக்கோலம் தழைக்கும் இந்தியத்
தாயே! உனக்கு நமஸ்காரம். 1

கண்டங்க ளெங்கும் காணுநற் காட்சிகள்
கலந்து தன்னுள்ளே காட்டுதலால்
அண்டமெங்கும் இல்லா அருமை இந்திய
அன்னை! உனக்கு நமஸ்காரம். 2

நீர்வளமும் காட்டின் நீள்வளமும் மலை
நேர்வளமும் நகர் சாரும்சிறப்பச்
சீர்வளமும் மிகத் திகழும் இந்தியச்
செல்வி! உனக்கு நமஸ்காரம். 3

ஞாலமெங்கும் வெகு காலமாக நல்ல
நாகரிகக் குறி யாகஉயர்
சீலமும் ஞானமும் சிறக்கும் பாரத
தேவி! உனக்கு நமஸ்காரம். 4

—வே. முத்துசாமி ஐயர்

பொருள் அடக்கம்

வரிசை	விஷயம்	பக்கம்
	அப்பியாசம் 1 —படப் பழக்கம்-1 ...	7
1.	பாடம் ...	8
	அப்பியாசம் 2 ...	9
2.	பாடம் ...	10
3.	பாடம் ...	11
4.	பாடம்	12
	அப்பியாசம் 3 ...	13
5.	பாடம் ...	14
	அப்பியாசம் 4 ...	15
	அப்பியாசம் 5 ...	16
6.	பாடம் ...	17
	அப்பியாசம் 6 ...	18
7.	பாடம் ...	20
8.	பாடம் ...	21
9.	பாடம் ...	22
10.	பாடம் ...	23
11.	பாடம் ...	24
	அப்பியாசம் 7 —படப் பழக்கம்-2 ...	25
	அப்பியாசம் 8 —கைவீசல் (பாட்டு) ...	26
12.	பாடம் ...	27
13.	பாடம் ...	28
	அப்பியாசம் 9 —நல்ல பிள்ளை ...	29
14.	பாடம் ...	30
15.	பாடம் ...	31
16.	பாடம் ...	32
17.	பாடம் ...	33
	அப்பியாசம் 10 —படப் பழக்கம்-3 ...	34

வரிசை	விஷயம்	பக்கம்
18.	பாடம் ...	35
19.	பாடம் ...	36
20.	பாடம் ...	37
	அப்பியாசம் 11 ...	38
21.	சுகவழி ...	40
	அப்பியாசம் 12 —படப் பழக்கம்-4 ...	41
22.	ஆறு சுவைகள் ...	42
23.	பூனை ...	43
24.	முரசுப் பாட்டு ...	44
25.	நாய் ...	45
26.	வாகனங்கள் ...	46
27.	பிராணிகளிடத்து அன்பு (பாட்டு) ...	48
	அப்பியாசம் 13 —படப் பழக்கம்-5 ...	49
28.	நல்ல பழக்கம் (பாட்டு) ...	50
29.	புத்தியுள்ள காகம் ...	51
30.	பள்ளிக்கூடத் தோட்டம்	52
	அப்பியாசம் 14 —படப் பழக்கம்-6 ...	55
31.	அரிசியின் கதை ...	57
32.	கடைத்தெரு ...	59
33.	புறாவும் எறும்பும் ...	62
34.	கிராமம் ...	64
35.	வேலனும், கந்தனும்— கதையும் பாட்டும் ...	66
	அப்பியாசம் 15 —படப் பழக்கம்-7 ...	70
	அப்பியாசம் 16 —படப் பழக்கம்-8 ...	71
	ஆத்திசூடி (பாட்டு) ...	72

சுதேச வாசகம்

இரண்டாம் புத்தகம்

அப்பியாசம்—1

படப் பழக்கம்—1

குறிப்பு:—முதலில் ஒவ்வொரு பிள்ளையையும் படத்தில் காண்பவைகளில் ஒன்றைமட்டும் கூறச் சொல்லவும். பிறகு உயிருள்ளவைகளையும், உயிரற்றவைகளையும் பிரித்துச் சொல்லச் செய்யவும். தெரிந்த வார்த்தைகளைக் கற்பலகையில் எழுதச் சொல்லவும்.

பாடம்—1

கை விரல்  கைத் தடி

தங்க மோதிரம்   தங்கக் காப்பு

குதிரை வால்   குதிரைக் கால்

கோழிமுட்டை   கோழிக் குஞ்சு

கிளி மூக்கு   கிளிக் கூண்டு

வாழை இலை   வாழைப் பழம்

ஆலமரம்   ஆலம் பழம்

பூ மாலை  பூந்தோட்டம்

அப்பியாசம்—2

அரிசி மூட்டை	அரிசிக் கூடை
ஆட்டு மந்தை	ஆட்டுக் குட்டி
இரும்பு ஆணி	இரும்புக் கம்பி
எட்டு அணு	எட்டுத் திக்கு
எருமை மாடு	எருமைப் பால்
கீரை விதை	கீரைப் பாத்தி
கொய்யா மரம்	கொய்யாக் காய்
சரிகை மாலை	சரிகைச் சேலை
நாய் வால்	நாய்க் குட்டி
பட்டு நூல்	பட்டுப் பூச்சி
மர நாற்காலி	மரப் பொம்மை
மாட்டு வண்டி	மாட்டுக் கொம்பு
வெள்ளி ரூபாய்	வெள்ளிச் செம்பு
தென்ன மட்டை	தென்னந் தோப்பு
மா மரம்	மாங் காய்
வேப்ப மரம்	வேப்பம் பழம்

பாடம்—2



இவர் என் தாய்.
அவர் என் தந்தை.
இருவரும் என் பெற்றோர்.
அவர் என் அண்ணன்.
இவன் என் தம்பி.
இருவரும் என் சகோதரர்.
இவர் என் அக்காள்.
அவள் என் தங்கை.
இருவரும் என் சகோதரிகள்.
எல்லோரும் ஒரு குடும்பம்.

இவர்—தந்தை—சகோதரர்—சகோதரிகள்—எல்லோரும் குடும்பம்—இருவரும்.

பாடம்—3



இவர் என் தாய்.

நான் இவர் பிள்ளை.

இவர் என்னைப் பெற்றவர்.

என்னிடம் அன்பு உள்ளவர்.

பாலூட்டி என்னை வளர்த்தவர்.

எனக்குத் தாலாட்டுப் பாடியவர்.

எனக்காக மருந்து உண்டவர்.

என்னை நல்ல பிள்ளை ஆக்கியவர்.

தாயே மேலான தெய்வம்.

(நான் — என்) — என்னை — எனக்கு — என்னிடம் — எனக்காக.

பிள்ளை — அன்பு — பால்ஊட்டி — தாலாட்டு — மருந்து — நல்ல — மேலான — தெய்வம்.

பாடம்—4



இது என் வீடு.

உயரமான இடத்தில் இருக்கிறது.

இதில் மரக் கதவுகள் உண்டு.

பெரிய ஜன்னல்களும் உண்டு.

இரும்புக் கம்பிகள் பார்.

கல்தூண்கள் இருக்கின்றன.

இங்கே நல்ல வெளிச்சம் உண்டு.

சுத்தமான காற்றும் அடிக்கிறது.

நாங்கள் இதில் இருக்கிறோம்.

(நான் — நாம் — நாங்கள்) — எங்கள்.

சுத்தமான — ஜன்னல்களும் — காற்றும் — உண்டு.

அடி — அடிக்கிறது. இரு — இருக்கிறோம்.

அப்பியாசம்—3

ஆட்டு	காட்டு	சேரு	எழுந்திரு
கூட்டு	பார்	மூடு	உயர்த்து
விரி	எடு	வாசி	சொல்லு
திற	தாழ்த்து	கொட்டு	பிடி

வை தை

இடத்தில் நில்.
கீழே ——.
வெளியே போ.
உள்ளே ——.
பாடம் ——.
கணக்குப் ——.
பாட்டுப்——.
கும்மி ——.
பந்து ——.
தண்ணீர் ——.
ஓட்டம் ——.
பட்சி பறக்கிறது.
மீன் ——.
கையை நீட்டு.
காலை ——.
ராமா, குனி.
ராமா, ——.
வேலை ——.

தலையை ஆட்டு.
கண்ணை மூடு.
வாயைத் திற.
பல்லைக் காட்டு.
கையை உயர்த்து.
கையைத் தாழ்த்து.
கைகளைச் சேரு.
கைகளை விரி.
கைகளைக் கொட்டு.
நீ எழுந்திரு.
புத்தகத்தை எடு.
இடது கையில் பிடி.
எழுத்துக் கூட்டு.
பாடம் வாசி.
புத்தகத்தை வை.
படத்தைப் பார்.
கதை சொல்லு.
பை தை.

தண்ணீர் — பட்சி — எழுத்து — கதை.

பாடம்—5



இது எங்கள் பாடசாலை.
இதில் நாங்கள் படிக்கிறோம்.
நான் இரண்டாவது வகுப்பில் படிக்கிறேன்.
எங்கள் உபாத்தியாயர் வருகிறார்.
முதலில் நாங்கள் எழுந்திருக்கிறோம்.
அவருக்கு வந்தனம் சொல்லுகிறோம்.
பிறகு நாங்கள் உட்காருகிறோம்.
உபாத்தியாயர் பாடம் சொல்லுகிறார்.
கரும்பலகையில் கணக்குப் போடுகிறார்.
கற்பலகையில் நாங்கள் எழுதுகிறோம்.
காலை மாலை பாடம் வாசி.

(வா) — வருகிறார். எழுந்திரு — எழுந்திருக்கிறோம். உட்காரு—உட்காருகிறோம். சொல்லு—சொல்லுகிறோம்—சொல்லுகிறார். (போடு)—போடுகிறார். (எழுது)—எழுதுகிறோம். வாசி. பாடசாலை — இரண்டாவது — முதலில் — பிறகு — வந்தனம். காலை—மாலை

அப்பியாசம்—4

நீ எங்கே போகிருய்?

நான் பள்ளிக்கூடம் ———.

அவன் எங்கே போகிருன்?

அவன் வீட்டுக்குப் ———.

நீ இங்கே வா.

நீ என்ன செய்கிருய்?

நான் அங்கே வருகிறேன்.

அவன் வகுப்புக்கு ———.

அவள் வகுப்புக்கு ———.

உபாத்தியாயர் வகுப்புக்கு ———.

ராமன் கணக்குப் ———

கோமதி கோலம் ———.

கமலா பாட்டுப் ———.

நீ கதை ———.

நான் கற்பலகையில் ———.

அவன் பம்பரம் ———.

அவள் கும்மி ———.

அவர்கள் இங்கே ———.

இவர்கள் அங்கே ———.

நீங்கள் எங்கே ———.

அப்பியாசம்—5

கேள்வியும் விடையும்

ஊர் ஊர்,	—	மயிலாப்பூர்
என்ன மயில்?	—	காட்டு மயில்
என்ன காடு?	—	ஆற்காடு
என்ன ஆறு?	—	பால் ஆறு
என்ன பால்?	—	கள்ளிப் பால்
என்ன கள்ளி?	—	இலைக் கள்ளி
என்ன இலை?	—	வாழை இலை
என்ன வாழை?	—	கற்பூர வாழை
என்ன கற்பூரம்?	—	ரஸ கற்பூரம்
என்ன ரஸம்?	—	மிளகு ரஸம்
என்ன மிளகு?	—	வால் மிளகு
என்ன வால்?	—	நாய் வால்
என்ன நாய்?	—	மர நாய்
என்ன மரம்?	—	பலா மரம்
என்ன பலா?	—	வேர்ப் பலா
என்ன வேர்?	—	வெட்டி வேர்
என்ன வெட்டி?	—	பனை வெட்டி
என்ன பனை?	—	தாளிப் பனை
என்ன தாளி?	—	விருந்தாளி
என்ன விருந்து?	—	மண விருந்து
என்ன மணம்?	—	பூ மணம்
என்ன பூ?	—	மாம் பூ
என்ன மா?	—	அம்மா

பாடம்—6



பசு வீட்டு மிருகம்.

பசுவை நாம் வளர்க்கிறோம்.

பசுவால் நமக்கு நன்மை உண்டு.

பசுவோடு கன்று நிற்கிறது.

பசுவுக்குக் கால்கள் நான்கு.

பசுவின் பால் நல்ல ஆகாரம்.

பசுவில் சிவப்பு நிறம் நல்லது.

பசுவினுடைய கொம்புகள் பலம் உள்ளவை.

பசுவினிடத்தில் பட்சமாய் இரு.

பசு — பசுவை — பசுவால் — பசுவோடு — பசுவுக்கு — பசுவின் — பசுவில் — பசுவினுடைய — பசுவினிடத்தில். வளர் — வளர்க்கிறோம். (நாம்) — நமக்கு. நன்மை — கன்று — ஆகாரம் — பலம் — பட்சமாய் (பக்ஷமாய்).

  

தலையால் வணங்குகிறோம். ——— பேசுகிறோம்.
——— பார்க்கிறோம். ——— நடக்கிறோம்.
கோமதி ——— தைக்கிறாள்.



கோழியோடு குஞ்சுகளும் போகின்றன.
——— குழந்தையும் இருக்கிறது.
——— பள்ளிக்கூடம் போகிறாள்.
——— நாயும் வருகிறது.
நீ ——— நிற்கிறாய்.

  

குதிரைக்குக் கால்கள் நான்கு.
——— சோறு போடு.
——— தண்ணீர் ஊற்று.
காக்கைக்குக் ——— இரண்டு.
——— கொம்புகள் ———.




வீட்டின் படத்தைப் பார்.

———— கால்கள் நான்கு.

———— மூக்கு சிவப்பு நிறம்.

———— வால் நீளமானது.




கூட்டில் குருவி இருக்கிறது.

———— பழங்கள் இருக்கின்றன.

———— பையன் நிற்கிறான்.

———— புத்தகம் வைத்திருக்கிறாள்.

நான் தரையில் நடக்கிறேன்.

பட்சி ———— பறக்கிறது.

மீன் ———— நீந்துகிறது.

தவளை ———— தத்துகிறது.

குரங்கு ———— ஏறுகிறது.

எலி ———— வசிக்கிறது.

தத்துகிறது—ஏறுகிறது—வசிக்கிறது.

பாடம்—7






புஷ்பம்	பக்ஷி	ஜாடி	ஹாரம்	வருஷம்
திராக்ஷை	ஜலம்	பாஷை	பக்ஷம்	வஸ்திரம்
விலை	தமிழ்	வாங்கு	இந்த	அந்த
அதிகம்	குறைவு	அழகு	ருசி	பிராணிகள்

ரோஜா புஷ்பம் அழகானது.

திராக்ஷைப்பழம் ருசியானது.

பட்டு வஸ்திரம் விலை அதிகம்.

இந்த வருஷம் மழை குறைவு.

அந்த ஜாடியில் ஜலம் ஊற்று.

ஜூனுக்குப் பின் ஜூலை மாதம்.

புஷ்ப ஹாரம் ஒன்று வாங்கு.

நாம் தமிழ்ப் பாஷை பேசுகிறோம்.

பக்ஷி மரத்தில் கூடு கட்டுகிறது.

பிராணிகளிடத்தில் பக்ஷமாய் இரு.

அழகு—அழகானது. ருசி—ருசியானது. மாதம்—மாசம்.

பாடம்—8

உன் பெயர் என்ன?

என் பெயர் ———.

உன் ஊர் எது?

என் ஊர் ———.

நீ எந்தத் தெருவில் வசிக்கிறாய்?

நான் ——— தெருவில் வசிக்கிறேன்.

உன் தகப்பனார் பெயர் என்ன?

என் தகப்பனார் பெயர் ———.

உன் தகப்பனாருக்கு என்ன வேலை?

என் தகப்பனாருக்கு ——— வேலை.

நீ எந்த வகுப்பில் படிக்கிறாய்?

நான் இரண்டாவது வகுப்பில் ———.

உன் வயது என்ன?

என் வயது ———.

பெயர்—எது—எந்த—தகப்பனார்—வயது.

பாடம்—9



கோழி வீட்டில் வளரும் பக்ஷி.
இதன் இறகுகள் குட்டையானவை.
இது அதிக உயரம் பறக்காது.
பெட்டைக் கோழி முட்டை இடும்.
முட்டையிலிருந்து குஞ்சு வெளிவரும்.
அது மண்ணைக் கிளறி இரை தேடும்.
குஞ்சுகளைக் கூடவே கூட்டிப்போகும்.
ஆண் கோழிக்குச் சேவல் என்று பெயர்.
அதன் தலையில் கொண்டை உண்டு.
அது அதிக அழகாய் இருக்கும்.
சேவல் அதிகாலையில் கூவும்.

பறக்கும் — பறக்காது. இடும் — தேடும் — போகும் — இருக்கும் — கூவும். மண் — கிளறி — இரை — கூடவே — கூட்டி — கொண்டை. (காலை) — அதிகாலை. இது — இதன். (அது) — அதன்.

பாடம்—10

மக்கள்	அக்கம் பக்கம் பார்.
தச்சன்	அது தச்சன் குச்சு.
பட்டம்	இது வட்டப் பெட்டி.
சுத்தம்	பாத்திரம் சுத்தம் செய்.
கப்பல்	அப்பா, அப்பம் வாங்கு.
முற்றம்	உன் வீட்டு முற்றம்.
சிங்கம்	உங்கள் தங்கை எங்கே?
இங்ஙனம்	அங்ஙனம் பேசு.
ஊஞ்சல்	கஞ்சி கொஞ்சம் ஊற்று.
பண்டம்	சுண்டல் கொண்டுவா.
அண்ணன்	எண்ணெய்க் கிண்ணம் எடு.
தந்தம்	கந்தன் ஆட்டு மந்தை.
கம்பம்	தம்பீ, பம்பரம் ஆடு.
கம்மல்	அம்மா, கும்மி அடி.
பன்றி	பசு ஈன்ற கன்று.
ஜன்னல்	தென்னங் கீற்றுப் பின்னு.
கொய்யா	நெய்யில் செய்யும் பண்டம்.
கொல்லன்	நல்ல சொல்லைக் கேள்.
செவ்வாய்	செவ்வாய்க் கிழமை வா.
பள்ளம்	அது கள்ளர் பள்ளிக்கூடம்.

குச்சு—வட்டம்—பாத்திரம்—அப்பம்—முற்றம்—கஞ்சி—சுண்டல்—எண்ணெய்—கிண்ணம்—ஈன்ற—கீற்று.

க ண்	த ங் க ம்	ம க ன்
த ச் ச ன்	ம ஞ் ச ள்	ச ர ம்
ச ட் ட ம்	க ட வு ள்	——
த லை	ப ந் த ம்	——
ப ண ம்	க ம் ப ம்	——
மு ற ம்	மு ற் ற ம்	மூ ன் று

கல் மிக கனமானது.
தச்சன் ஊஞ்சல் செய்கிறான்.
படத்தின் சட்டம் பார்.
தட்டான் செய்த நகை.
பறை பலமாய் அடி.
ஏணி ஏறிக் கீற்று எடு.
தனி வழி போவது பயம்.
பட்டுப் புடவை நீல நிறம்.
மஞ்சள் வர்ணம் பூசு.
தங்கம் அதிக விலை உள்ளது.
சுக்கும் மிளகும் வாங்கு.
மூன்று கூறு வற்றல் கொடு.

கனம்—சட்டம்—பறை—தனிவழி—புடவை—வர்ணம்—வற்றல்—தச்சன்—தட்டான்—பயம்—பூசு.

அப்பியாசம்—7 படப் பழக்கம்—2



ஒவ்வொரு படத்தைப்பற்றியும் ஒவ்வொரு வாக்கியம் எழுது

அப்பியாசம்—8



கை வீசல்

(பாட்டு)

கை வீசம்மா கை வீசு
கடைக்குப் போகலாம் கை வீசு
மிட்டாய் வாங்கலாம் கை வீசு
மெதுவாய்த் தின்னலாம் கை வீசு
பழங்கள் வாங்கலாம் கை வீசு
பாடித் தின்னலாம் கை வீசு
பொம்மைகள் வாங்கலாம் கை வீசு
போய் விளையாடலாம் கை வீசு
சொக்காய் வாங்கலாம் கை வீசு
சொகுசாய்ப் போடலாம் கை வீசு
மல்லிகை வாங்கலாம் கை வீசு
மாலைகள் கட்டலாம் கை வீசு
கோவில் போகலாம் கை வீசு
கும்பிட்டு வரலாம் கை வீசு
தேரைப் பார்க்கலாம் கை வீசு
திரும்பி வரலாம் கை வீசு

பாடம்—12



பசு பால் கொடுக்கிறது.

எருது ஏர் உழுகிறது.

நாய் வீட்டைக் காவல் செய்கிறது.

பூனை எலியைப் பிடிக்கிறது.

குதிரை வண்டி இழுக்கிறது.

கழுதை பொதி சுமக்கிறது.

ஒட்டகம் பாரம் சுமக்கிறது.

மீன் தண்ணீரைச் சுத்தம் செய்கிறது.

சேவல் அதிகாலையில் கூவி எழுப்புகிறது.

காகம் அசுத்தங்களைப் போக்குகிறது.

உழுகிறது — இழுக்கிறது — சுமக்கிறது — எழுப்பு கிறது — போக்குகிறது — ஏர் — காவல் — பொதி — பாரம் — சுத்தம் — அசுத்தம்.

பாடம்—13



கோழி	கூவுகிறது.
காக்கை	கரைகிறது.
குயில்	கூவுகிறது.
மயில்	அகவுகிறது.
ஆந்தை	அலறுகிறது.
பூனை	சீறுகிறது.
நாய்	குரைக்கிறது.
நரி	ஊளையிடுகிறது.
ஆடு	கத்துகிறது.
பசு	கதறுகிறது.
குதிரை	கனைக்கிறது.
கழுதை	கத்துகிறது.
பன்றி	உறுமுகிறது.
யானை	பிளிறுகிறது.
புலி	உறுமுகிறது.
சிங்கம்	கர்ஜிக்கிறது.

அப்பியாசம்—9

நல்ல பிள்ளை

நல்ல பிள்ளை காலையில் எழுந்திருக்கிறான்.

கை கால் சுத்தம் ————————.

கடவுளைத் ————————.

பாடத்தை நன்றாய்ப் ————————.

சுத்தமான உடை ————————.

சரியான நேரத்தில் பள்ளிக்கூடம் ————————.

உபாத்தியாயர் சொல்வதைக் ————————.

அவர் சொல்படி ————————.

பிள்ளைகளிடம் அன்பாய் ————————.

சரியான காலத்தில் சாப்பாடு சாப்பிடுகிறான்.

மாலையில் விளையாட்டு ————————.

இரவில் பாடம் ————————.

எப்பொழுதும் உண்மை ————————.

பெரியவர்களுக்குப் பணிந்து ————————.

நீயும் நல்ல பிள்ளையாய் இரு.

உடை—நேரம்—காலம்—அன்பு—எப்பொழுதும்—பெரியவர்கள்—உண்மை—பணிந்து.

பாடம்—14



வேளாளன் வயல் உழுகிறான்.

கொத்தன் வீடு கட்டுகிறான்.

தச்சன் மரவேலை செய்கிறான்.

தட்டான் நகைகள் செய்கிறான்.

கொல்லன் இரும்புவேலை செய்கிறான்.

கன்னான் பாத்திரங்கள் செய்கிறான்.

குயவன் மண்பாண்டம் செய்கிறான்.



சேணியன் துணி நெய்கிறான்.

பாடம்—15



வாணியன் எண்ணெய் ஆட்டுகிறான்.

செம்படவன் மீன் பிடிக்கிறான்.

வியாபாரி பண்டங்கள் விற்கிறான்.

வண்ணான் துணி வெளுக்கிறான்.

நாவிதன் க்ஷவரம் செய்கிறான்.

செம்மான் செருப்புத் தைக்கிறான்.



வீரன் சண்டை செய்கிறான்.

உபாத்தினி பாடம் கற்பிக்கிறாள்.

பாடம்—16



சூரியன்



சந்திரன்

சூரியன் காலையில் உதிக்கிறது.
நடுப்பகலில் உச்சியில் இருக்கிறது.
மாலையில் சூரியன் மறைகிறது.
பிறகு சந்திரன் உதிக்கிறது.
சூரியன் சூடும் வெளிச்சமும் கொடுக்கிறது.
சூரியன் ஒளியால் சுத்தம் ஏற்படுகிறது.
சந்திரன் ஒளி குளிர்ச்சியானது.
சூரிய வெளிச்சம் உள்ள காலம் பகல்.
சூரிய வெளிச்சம் இல்லாத காலம் இரவு.
ஒரு பகலும் ஒரு இரவும் சேர்ந்தது ஒரு நாள்.
நாளுக்குக் கிழமை என்றும் பெயர்.
ஏழு நாட்கள் ஒரு வாரம் ஆகும்.
ஒரு மாதத்துக்கு முப்பது நாட்கள்.
பன்னிரண்டு மாதங்கள் ஒரு வருஷம் ஆகும்.

உதிக்கிறது — மறைகிறது — ஏற்படுகிறது — சூடு — வெளிச்சம் — ஒளி — குளிர்ச்சி — நாள் — கிழமை — வாரம் — பன்னிரண்டு.





காலையில் சூரியன் கிழக்கே உதிக்கிறது.
நீ கிழக்கே பார்த்து நில்.
இப்பொழுது உன் முன்பக்கம் கிழக்கு.
உன் பின் பக்கம் மேற்கு.
உன் இரு கைகளையும் பக்கங்களில் நீட்டு.
இப்பொழுது உன் வலதுகைப் பக்கம் தெற்கு.
உன் இடதுகைப் பக்கம் வடக்கு.
மாலையில் சூரியன் மேற்கில் ——.
மொத்தம் நான்கு திசைகள் உண்டு.
அவைகளின் பெயர்களைச் சொல்லு.
உன் தேசப் படத்தைப் பார்த்து நில்.
படத்தின் தலைப் பக்கம் வடக்கு.
படத்தின் அடிப்பக்கம் தெற்கு.
உன் வலதுகைப் பக்கம் கிழக்கு.
உன் இடதுகைப் பக்கம் மேற்கு.
பள்ளிக்கூடத்திற்கு—— என்ன இருக்கிறது?

கிழக்கு—மேற்கு—தெற்கு—வடக்கு—திசைகள்—தேசம்.

அப்பியாசம்—10 படப் பழக்கம்—3

என்ன செய்கிறார்கள்? (வாக்கியம் எழுது)

பாடம்—18

ஆம்—அல்ல. உண்டு—இல்லை. வேண்டும்—வேண்டாம்.

செய்—செய்யாதே. பறக்கும்—பறக்காது.

ராமா, இது உன் புத்தகமா?
ஆம் ஐயா, அது என் புத்தகம்.
இது உன் கற்பலகையா?
இல்லை ஐயா, அது என்னுடையது அல்ல.
கமலா, உனக்கு எத்தனை தம்பி உண்டு?
எனக்கு ஒரு தம்பி உண்டு, அம்மா!
உனக்குத் தங்கை உண்டா?
அம்மா, எனக்கு தங்கை இல்லை.
சீனு, உனக்கு என்ன வேண்டும்?
எனக்குப் புத்தகம் வேண்டும், ஐயா!
உனக்குப் பேனா வேண்டுமா?
எனக்குப் பேனா வேண்டாம், ஐயா!
கோபாலா, கணக்குச் செய்.
வகுப்பில் சப்தம் செய்யாதே.
பருந்து அதிக உயரம் பறக்கும்.
கோழி அதிக உயரம் பறக்காது.

என்னுடையது—எத்தனை—சப்தம்.

ஐயா—அம்மா.

பாடம்—19

இன்று — நேற்று — நாளை.

போகிறேன் — போனேன் — போவேன்.

நீ தினம் பள்ளிக்கூடம் போகிறாயா ?
ஆம், நான் தினம் பள்ளிக்கூடம் போகிறேன்.
சூரி, இன்று என்ன கிழமை ?
இன்று ஞாயிற்றுக் கிழமை.
இன்று உனக்குப் பள்ளிக்கூடம் உண்டா ?
இன்று எனக்குப் பள்ளிக்கூடம் இல்லை.
நேற்று என்ன கிழமை ?
நேற்று சனிக்கிழமை.
நீ நேற்று பள்ளிக்கூடம் போனாயா ?
நான் நேற்று பள்ளிக்கூடம் போனேன்.
நாளை என்ன கிழமை ?
நீ நாளை பள்ளிக்கூடம் போவாயா ?
நாளை திங்கட்கிழமை.
நான் நாளை பள்ளிக்கூடம் போவேன்.
இப்பொழுது நீ என்ன செய்கிறாய் ?
இப்பொழுது நான் பாடம் எழுதுகிறேன்.
இன்று காலையில் என்ன செய்தாய் ?
இன்று காலையில் பாடம் படித்தேன்.
இன்று மாலையில் என்ன செய்வாய்?
இன்று மாலையில் விளையாடுவேன்.

பாடம்—20

எடு — வை. வா — போ.

சூரி, உன் புத்தகத்தை எடு.
நீ என்ன செய்தாய் ?
நான் புத்தகத்தை எடுத்தேன்.
அதை மேஜையின் மேல் வை.
ராமா, சூரி என்ன செய்கிறான் ?
சூரி புத்தகத்தை வைக்கிறான்.
கோபாலா, சூரி என்ன செய்தான் ?
சூரி புத்தகத்தை வைத்தான்.
நான் இப்பொழுது என்ன செய்கிறேன் ?
நீங்கள் புத்தகத்தை எடுக்கிறீர்கள்.
நான் என்ன செய்தேன் ?
நீங்கள் புத்தகத்தை எடுத்தீர்கள்.
புத்தகம் எங்கே இருந்தது ?
புத்தகம் மேஜையில் இருந்தது.
சூரி இங்கே வா.
ராமா, சூரி என்ன செய்தான் ?
சூரி அங்கே வந்தான்.
நீ எங்கே போனாய் ?
நான் வீட்டுக்குப் போனேன்.
மாலையில் நீ எங்கே போவாய் ?
மாலையில் நான் விளையாடப் போவேன்,

அப்பியாசம்—11

1.	வருகிறேன்	வந்தேன்	வருவேன்
2.	வருகிறோம்	வந்தோம்	வருவோம்
3.	வருகிறாய்	வந்தாய்	வருவாய்
4.	வருகிறீர்கள்	வந்தீர்கள்	வருவீர்கள்
5.	வருகிறோம்	வந்தோம்	வருவோம்
6.	வருகிறான்	வந்தான்	வருவான்
7.	வருகிறாள்	வந்தாள்	வருவாள்
8.	வருகிறார்கள்	வந்தார்கள்	வருவார்கள்
9.	வருகிறது	வந்தது	வரும்
10.	வருகின்றன	வந்தன	வரும்

1. நான் இப்பொழுது வருகிறேன்.
2. நாங்கள் ——— ———.
3. நீ ——— ———.
4. நீங்கள் ——— ———.
5. நாம் ——— ———.
6. அவன் ——— ———.
7. அவள் ——— ———.
8. அவர்கள் ——— ———.
9. அது ——— ———.
10. அவைகள் ——— ———.

1. நான் நேற்று வந்தேன்.
2. நாங்கள் ——— ———.
3. நீ ——— ———.
4. நீங்கள் ——— ———.
5. நாம் ——— ———.
6. அவன் ——— ———.
7. அவள் ——— ———.
8. அவர்கள் ——— ———.
9. அது ——— ———.
10. அவைகள் ——— ———.

1. நான் நாளை வருவேன்.
2. நாங்கள் ——— ———.
3. நீ ——— ———.
4. நீங்கள் ——— ———.
5. நாம் ——— ———.
6. அவன் ——— ———.
7. அவள் ——— ———.
8. அவர்கள் ——— ———.
9. அது ——— ———.
10. அவைகள் ——— ———.

கோடிட்ட இடங்களில் பொருத்தமான வார்த்தைகளைச் சேர்த்துக் கற்பலகையில் எழுதவும்.

பாடம்—21

சுகவழி

1. காலையில் துயில் எழு.
2. தெய்வத்தை வழிபடு.
3. மலஜலம் தொலை கழி.
4. பற்களை நன்றாய்த் துலக்கு.
5. அழுக்குத் தேய்த்துக் குளி.
6. ஆடையை துவைத்துக் கட்டு.
7. கந்தையானாலும் கசக்கிக் கட்டு.
8. கூழானாலும் குளித்துக் குடி.
9. நன்றாக மென்று உண்.
10. மீதூண் விரும்பேல்.
11. பசித்துப் புசி.
12. மாலையில் உலாவு.
13. வியர்க்க விளையாடு.
14. கண்ட விடத்தில் துப்பாதே.
15. நகத்தைக் கடிக்காதே.
16. சுத்தம் சோறு போடும்.

அப்பியாசம்—12

படப் பழக்கம்—4



கூட்டில் ஆகாரம் இருக்கிறது.



ஒரு எலி வருகிறது.



கூட்டுக்குள் நுழைகிறது.



ஆகாரத்தைக் கடிக்கிறது.



எலி கூட்டில் அகப்படுகிறது.

கூட்டில் என்ன இருந்தது ?

எலி என்ன செய்தது ?

பிறகு என்ன நடந்தது ?

கூட்டில் ஆகாரம் இருந்தது.

எலி வந்தது, கூட்டுக்குள் நுழைந்தது, ஆகாரத்தைக் கடித்தது, எலி கூட்டில் அகப்பட்டது.

நுழைகிறது—கடிக்கிறது—அகப்படுகிறது.

பாடம்—22

ஆறு சுவைகள்

தித்திப்பு	உவர்ப்பு	கார்ப்பு
புளிப்பு	துவர்ப்பு	கசப்பு

கரும்பு தித்திக்கும்
எலுமிச்சம்பழம் புளிக்கும்
கடல் தண்ணீர் உவர்க்கும்
வாழைப் பூ துவர்க்கும்
மிளகாய் காரும்
வேப்பங்காய் கசக்கும்

சூடு	கனம்	கடினம்
குளிர்ச்சி	இலேசு	மிருது

சூரியன் ஒளி சூடானது.
சந்திரன் ஒளி குளிர்ச்சியானது.
தங்கம் கனமானது.
காகிதம் இலேசானது.
கல் கடினமானது.
பஞ்சு மிருதுவானது.

கரும்பு—கடல்—காகிதம்—பஞ்சு.



பாடம்—23

பூனை

இது ஒரு பூனையின் படம். பூனை வீட்டில் வளரும் பிராணி. பூனையில் பல நிறங்கள் உண்டு.

பூனை பகலில் படுத்துத் தூங்கும். இரவில் அதற்குக் கண் நன்ருய்த் தெரியும். பூனை எலி பிடிக்கும்.

பூனையின் கால்களின் அடியில் மெதுவான சதைத் திண்டுகள் உண்டு. அதன் நகங்கள் கூர்மையானவை. சாதாரணமாய் அது நகங்களை உள்ளே இழுத்துக்கொண்டிருக்கும். அது நடக்கும்போது சப்தம் உண்டாவதில்லை. இஷ்டமானபோது அது நகங்களை வெளியே நீட்டிக்கொள்ளும். எலியைக் கண்டதும் நகத்தை நீட்டிக்கொண்டு அதன்மேல் பாயும்.

பூனை, பால், தயிர், வெண்ணெய், நெய், மாமிசம், சோறு முதலியவைகளைத் தின்னும். எலிகளையும் சிறு பறவைகளையும் பிடித்துத் தின்னும். அது அடுப்பண்டையிலும் படுத்துக்கொள்ளும். நாயைக் கண்டால் பயந்து ஓடும்.

பூனை, நாயைப்போல நன்றியுள்ள பிராணி அல்ல.

நன்ருய்—படுத்து—தூங்கும்—மெதுவான—சதை—பாயும்—தின்னும்.

பாடம்—24

முரசுப் பாட்டு

வெள்ளை நிறத்தொரு பூனை—எங்கள்
வீட்டில் வளருது கண்டீர் ;
பிள்ளைகள் பெற்றதப் பூனை—அவை
பேருக் கொரு நிறமாகும் ;
சாம்பல் நிறம் ஒருகுட்டி—கருஞ்
சாந்து நிறம் ஒருகுட்டி.
பாம்பு நிறம் ஒருகுட்டி—வெள்ளைப்
பாலின் நிறம் ஒருகுட்டி.
எந்த நிறம் இருந்தாலும்—அவை
யாவும் ஒரே தரம் அன்றோ ?
இந்த நிறம் சிறிதென்றும்—இஃது
ஏற்றம் என்றும் சொல்லலாமோ ?
ஒன்றென்று கொட்டுமுரசே !—அன்பில்
ஓங்கென்று கொட்டுமுரசே !
நன்றென்று கொட்டுமுரசே !—இந்த
நானில மாந்தருக் கெல்லாம்.

—பாரதியார்.

நாய்

இது ஒரு நாயின் படம். நாய் வீட்டில் வளரும் பிராணி. நாயில் பல வகைகள் உண்டு. நாயில் பல நிறங்களும் உண்டு.



நாய் வளர்ப்பவரிடம் பிரியமாய் இருக்கும். வீட்டைக் காவல் செய்யும். நாய்க்குச் சந்தோஷம் வந்தால் வாலை ஆட்டும். கோபம் வந்தால் பல்லைக் காட்டி உறுமும். அந்நியரைக் கண்டால் குரைக்கும்.

நாய் தூரத்தில் உள்ள பொருள்களையும் வாசனையால் அறிந்துகொள்ளும். இதை **மோப்பம் பிடித்தல்** என்று சொல்லுகிறோம்.



நாய் வேகமாய் ஓடும். இதனாலேயே நாய்களை வேட்டையாடப் பழக்குகிறார்கள். சில நாய்கள் தண்ணீரில் நன்றாய் நீந்தும். நாய்கள் மனிதனுக்குப் பல உதவிகள் செய்கின்றன. நாய், பால், சோறு, மாமிசம் முதலியவற்றைத் தின்னும். எலும்பைக் கடிக்க இதற்கு அதிகப் பிரியம். அது நாக்கைத் தொங்கவிட்டுக்கொண்டே ஓடும். நாய் மிகவும் நன்றியுள்ள பிராணி.

நாயினிடம் அன்பாய் இரு.

பிரியம்—சந்தோஷம்—கோபம்—வாசனை—மோப்பம்—வேட்டை—பழக்கு—உதவி—அறிந்துகொள்ளும்.

வாகனங்கள்



இது ஒரு கை வண்டி. இதை மனிதன் இழுக்கிருன். இதில் மூட்டைகள் ஏற்றுவார்கள்.



இது ஒரு மாட்டு வண்டி. வண்டியை மாடு இழுக்கிறது. இதை ஒற்றை மாட்டு வண்டி என்று சொல்லுகிருேம். இந்த வண்டியில் மனிதர்கள் ஏறிப் போவார்கள். இதில் சாமான்களும் ஏற்றலாம். இரண்டு மாடுகள் இழுக்கும் வண்டிகளும் இருக்கின்றன. அதை இரட்டை மாட்டு வண்டி என்று சொல்லுகிருேம்.



இது ஒரு குதிரை வண்டி. குதிரை வண்டி வேகமாய்ப் போகும். இதில் மனிதர் ஏறிச் செல்வார்கள்.



இது புகை வண்டி. இது இரும்புத் தண்டவாளங்களின் மேல் ஓடும். இது நீராவியால் ஓடுகிறது. இதில் பல வண்டிகள் இருக்கின்றன. வண்டிகளை எஞ்சின் இழுக்கிறது. புகை வண்டி மிகவும் வேகமாய்ப் போகும்.



இது ஒரு மோட்டார். இது தரையில் ஓடும். இதற்கு நான்கு சக்கரங்கள் உண்டு. சக்கரங்களைச் சுற்றிலும் ரப்பர் போட்டிருக்கிறது. இதுவும் மிக வேகமாய்ப் போகும்.



இது ஒரு சைக்கிள் வண்டி. இதற்கு இரண்டு சக்கரங்கள் உண்டு. இதைத் **துவிச் சக்கர வண்டி** என்றும் சொல்லலாம். இதில் ஒருவர்தான் ஏறிச்செல்ல முடியும்.



இது ஒரு கப்பல். கப்பல் கடலில் போகும். இது காற்றின் உதவியால் செல்லும். இக் காலத்தில் நீராவியால் ஓடும் கப்பல்கள் அதிகம். கப்பலில் மனிதர்களும் போவார்கள். சாமான்களையும் ஏற்றிச் செல்லுவார்கள்.

முட்டைகள்—வேகமாய்—செல்லுவார்கள்—தண்டவாளம்—நீராவி—எஞ்சின்—ரப்பர்—துவிச்சக்கர வண்டி—முடியும்.

பாடம்—27

பிராணிகளிடத்து அன்பு

(பாட்டு)

ஓடி விளையாடு பாப்பா—நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா—ஒரு
குழந்தையை வையாதே பாப்பா. (1)

சின்னஞ் சிறு குருவிபோல—நீ
திரிந்து பறந்துவா பாப்பா
வன்னப் பறவைகளைக் கண்டு—நீ
மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா. (2)

கொத்தித் திரியும் அந்தக் கோழி—அதைக்
கூட்டி விளையாடு பாப்பா
எத்தித் திருடும் அந்தக் காக்காய்—அதற்கு
இரக்கப் படவேணும் பாப்பா. (3)

வண்டி இழுக்கும் நல்ல குதிரை—நெல்லு
வயலில் உழுது வரும் மாடு
அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு—இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா. (4)

—பாரதியார்.

அப்பியாசம்—13

படப் பழக்கம் 5

தைரியம் உள்ள ராமன்



ராமனும் அவன் தங்கையும் தெருவில் நின்றுகொண்டிருந்தார்கள். அப்போது ஒரு நாய் அவர்களைக் கடிக்க ஓடி வந்தது. ராமனுடைய தங்கை பயந்து அழுதாள். ராமன் தன் தங்கையை எப்படிக் காப்பாற்றினுன் ?———

படத்தைப் பார்த்துக் கதையைச் சொல்லுங்கள்.

பாடம்—28

நல்ல பழக்கம்

(பாட்டு)

(சின்னச் சின்ன எறும்பே என்ற மெட்டு)

என் அருமைக் குழந்தாய் இன்று காலை எழுந்தாய்
சொன்ன சொல்லைக் கடவாய் சுறுசுறுப்பாய் நடப்பாய்
காலையிலே எழுவாய் கடவுளைத் தொழுவாய்
வேலைகளில் முயல்வாய் விருப்புடன் பயில்வாய்
அன்னை தந்தை வணங்கு அவர் சொல்லுக் கிணங்கு
நன்னயமாய்ப் பழகு நல்வழியில் ஒழுகு
பள்ளிக்கூடம் போக பரபரப்பாக
உள்ள மகிழ்வோடு உற்சாகமாய் ஓடு
நல்ல பிள்ளையோடு நாளும் நீயே கூடி
நல்லவனாய்ச் சேராய் நன்மை உண்டு பாராய்
சின்னஞ் சிறு ஜந்துவை செய்யாதே நீ தொந்தரை
அன்னம் தண்ணீர் தந்ததை ஆதரிப்பாய் மைந்தனே !

—கா. கனகராஜ ஐயர்

பாடம்—29

புத்தியுள்ள காகம்

வெயில் காலத்தில் ஒரு நாள் ஒரு காகத்திற்கு அதிக தாகமாய் இருந்தது. தண்ணீருக்காக அது அங்கும் இங்கும் அலைந்தது. எங்கும் தண்ணீர் கிடைக்கவில்லை.

கடைசியில் ஒரு இடத்தில் தண்ணீர்க் குடம் ஒன்றைப் பார்த்தது. உடனே ஓடிக் குடத்தின் மேல் உட்கார்ந்தது. ஆனால் குடத்தில் கொஞ்சம் தண்ணீர் தான் இருந்தது. அது காகத்திற்கு எட்டவில்லை.

காகம் 'என்ன செய்யலாம்' என்று யோசித்துப் பார்த்தது. பிறகு அங்குமிங்கும் ஓடி சிறு கல் ஒன்றைத் தன் அலகால் பொறுக்கியது. அதைக் கொண்டு வந்து தண்ணீர்க் குடத்தில் போட்டது. இப்படியே ஒவ்வொன்றாகப் பல கற்களைப் போட்டது. குடத்தில் இருந்த தண்ணீர் மெள்ள மெள்ள மேலே வந்தது.



கடைசியில் குடத்தில் இருந்த தண்ணீர் காகத்துக்கு எட்டியது. காகமும் வயிறு நிறையத் தண்ணீர் குடித்தது. அதன் தாகமும் அடங்கியது. பின்பு அது சந்தோஷமாய்ப் பறந்து ஓடியது.

தாகம் — இடம் — அலகு — வயிறு — அலைந்தது—அடங்கியது—கிடைக்கவில்லை—எட்டவில்லை—யோசித்து—ஒவ்வொன்றாக—மெள்ள.

பாடம்—30

பள்ளிக்கூடத் தோட்டம்



இது எங்கள் பள்ளிக்கூடத் தோட்டம். முதலில் நாங்கள் நிலத்தை நன்ருய்க் கொத்தினேம். உரம் போட்டோம். பாத்திகள் கட்டினேம். விதைகள் விதைத்தோம். சில செடிகளை நட்டோம். கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்தோம். பாத்திகளுக்குப் பாய்ச்சினேம். செடி கொடி முதலியன முளைத்துத் தழைத்தன.



இது கீரைப் பாத்தி. பாத்தியில் கீரை விதைகளைத் தெளிக்க வேண்டும். கீரையைச் சமைத்துச் சாப்பிடலாம். தேக சுகத்துக்கு இது மிகவும் நல்லது.



இது கத்திரிச் செடி. செடியில் கத்திரிக்காய்களைப் பார். கத்திரிச் செடிகள் அதிக உயரம் வளரா. வெண்டை, மிளகாய், கொத்தவரை முதலிய பல காய்கறிச் செடிகளும் இங்கே இருக்கின்றன.

இது அவரைக் கொடி. அவரைக் கொடி உயரப் படரும். சுரை, புடல், பீர்க்கு முதலிய கொடிகளும் உயரப் படரும். பறங்கிக் கொடி தரைமேல் படரும். பூசணி, பாகல் முதலிய கொடிகளும் தரைமேல் படரும். காய்கறிகளைச் சமைத்துச் சாப்பிடுகிறோம்.



இது ரோஜாச் செடி. ரோஜாப் புஷ்பம் அழகானது. நல்ல வாசனையும் உள்ளது. மல்லிகை, சாமந்தி, அரளி முதலிய புஷ்பச் செடிகளும் இங்கே இருக்கின்றன. முல்லை, சம்பங்கி முதலிய புஷ்பக் கொடிகளும் இருக்கின்றன.



இது ஒரு வாழை. இதற்கு விதை கிடையாது. வாழைக் கன்றை நடவேண்டும். வாழைக்குக் கிளைகள் இல்லை. இதன் இலை பெரியது. இலையில் சாப்பிடலாம். வாழை ஒரு குலைதான் தள்ளும். குலையில் காய்கள் இருக்கின்றன. வாழைப் பூவைப் பார். வாழைப்பூ, தண்டு, காய் இவைகளைக் கறி சமைக்கலாம். வாழைப் பழத்தைச் சாப்பிடலாம். எங்கள் தோட்டம் மிகவும் செழிப்பாய் இருக்கிறது.

தோட்டம்—நிலம்—உரம்—பாத்தி—கிணறு—தேகசுகம்—காய் கறி—கன்று—கிளை—குலை—செழிப்பு—கொத்து— நடு — இறை — பாய்ச்சு — முளை—தழை—தெளி—சமை—படர்—தள்ளு.

அப்பியாசம்—14

படப் பழக்கம் 6



ராமனும் கிருஷ்ணனும்

1. ராமன் பள்ளிக்கூடத்துக்குப் புறப்பட்டான்.
2.
3.
4.
5.
6. உபாத்தியாயர் புத்தி சொல்லுகிறார். கிருஷ்ணன் பாடம் படிக்கிறான்.

வழியில் என்ன நடந்தது? படத்தைப் பார்த்துச் சொல்லுங்கள்.


1
2
3
4
5
6
7
8
9
10
11
12

பாடம்—31

அரிசியின் கதை

இது ஒரு வயல். நெல் விளையும் வயல் நன்செய். கம்பு, சோளம், துவரை முதலிய தானியங்கள் விளையும் நிலம் புன்செய். படத்தில் இருப்பது ஒரு நெல் வயல். நெல் வயலை முதலில் கலப்பையால் உழுவார்கள். கலப்பைக்கு ஏர் என்ற பெயரும் உண்டு. கலப்பையை இரண்டு மாடுகள் இழுத்துப் போகும்.

உழுதபின் தண்ணீர் பாய்ச்சுவார்கள். பிறகு பரம்பு அடிப்பார்கள். பரம்பு அடிப்பதால் வயல் ஒரே மட்டம் ஆகும். பரம்பு அடித்தபின் வயலில் விதை தெளிப்பார்கள். சில நாட்களில் விதைகள் ஊறி முளைக்கும். இந்த முளைக்கு நாற்று என்று பெயர்.

நாற்று வளர்ந்ததும் பிடுங்கி நடுவார்கள். இதுதான் நாற்று நடவு. நாற்று சில நாட்களில் பயிர் ஆகும். பிறகு களை எடுப்பார்கள். இதன்பின் பயிர்கள் கதிர் விடும்.

கதிர்கள் முற்றித் தலை சாய்ந்தபின், அவைகளை அறுத்துக் கட்டுகளாகக் கட்டுவார்கள். இது தான் அறுவடை. கட்டுக்களைக் களத்துக்குக் கொண்டு போவார்கள். அங்கேதான் தாளைப் பிடித்துக்கொண்டு அவைகளை அடிப்பார்கள். தாள்களிலிருந்து நெல் உதிர்ந்துவிடும். நெல் இல்லாத தாள்களை வைக்கோல் என்று சொல்லுவார்கள். வைக்கோலைப் போர் போராய்ப் போடுவார்கள்.

உதிர்ந்த நெல்லைத் தூசிபோக்கிக் குவிப்பார்கள். பிறகு நெல்லை அளந்து சாக்குப் பைகளில் கட்டுவார்கள். அவைகளை வண்டியில் ஏற்றிக் களஞ்சியத்தில் கொண்டுபோய்ச் சேர்ப்பார்கள்.

நெல்லை உரலில் போட்டு உலக்கையால் குத்துவார்கள். நெல்லைக் குத்தினுல் அரிசி ஆகும். அரிசியைச் சோறு சமைப்பார்கள். சோற்றை நாம் சாப்பிடுகிறோம். குத்தின அரிசியே நல்லது.

வயல் — நன்செய் — புன்செய் — மட்டம் — நாற்று—பயிர் — களை — கதிர் — களம் — தாள் — வைக்கோல் — போர் — தூசி — சாக்குப்பை — களஞ்சியம் — விளையும் — ஊறி — பிடுங்கு — முற்றி — உதிர்ந்து — அளந்து — தெளி — அறு — கட்டு — குவி — குத்து — உழுதல் — பரம்பு அடித்தல் — விதை தெளித்தல் — நாற்று நடவு — அறுவடை — கதிர் அடித்தல்.

கடைத் தெரு

(மணியும் அவன் தந்தையும் கடைத்தெருவில் போகிருர்கள்)

மணி:— அப்பா! இந்தத் தெருவில் மட்டும் ஏன் ஜனங்கள் கூட்டமாய் இருக்கிருர்கள்?

தந்தை:—மணி! இது கடைத்தெரு. அதனுல்தான் இங்குக் கூட்டம் அதிகமாயிருக்கிறது. இங்கே ஜனங்கள் என்ன செய்கிருர்கள், பார்! அதோ அவன் கையில் என்ன வைத்திருக்கிருன்?

மணி:—அப்பா! அவன் கையில் ஒரு கூடை வைத்திருக்கிருன். அதில் பல காய்கறிகள் இருக்கின்றன. இவைகளை எங்கேயிருந்து கொண்டு போகிருன்?

தந்தை:— அவன் அவைகளைக் காய்கறிக் கடையிலிருந்து வாங்கிக்கொண்டு போகிருன். அதோ பார்! அந்தக் காய்கறிக் கடையில் எல்லாவிதமான காய்கறிகளும் இருக்கின்றன.

மணி:— அப்பா! அதோ ஒரு பெண் ஒரு புதுச்சேலையைக் கையில் வைத்திருக்கிருளே. அது எங்கே வாங்கினது?

தந்தை:—சேலை, வேஷ்டி முதலிய துணிமணிகள் விற்கும் கடைக்கு ஜவுளிக்கடை என்று பெயர்.

மணி:—ஆம் அப்பா! நம் வீட்டுக்கு வேண்டிய புளி, உப்பு, மிளகாய் எல்லாம் எங்கே கிடைக்கும்?

தந்தை:—மணி! அதோ பார்! அதுதான் பலசரக்குக் கடை. அதில்தான் அவைகளை வாங்கலாம்.

மணி:—பக்கத்தில் ஒரு கடையில் குடங்களும் தகரங்களும் வைத்திருக்கிறதே. அது என்ன கடை அப்பா ?

தந்தை:—மணி! நீயே போய்க் கேட்டுக்கொண்டுவா.

(மணி போய்க் கேட்டு வருகிறுன்)

மணி:—அப்பா ! அது எண்ணெய்க் கடையாம். அதற்குப் பக்கத்தில் பக்ஷணக்கடை இருக்கிறது. எனக்கு ஒரு லட்டு வாங்கித் தருகிறீர்களா ?

தந்தை:—ஆகட்டும் மணி !

மணி:—அப்பா ! எனக்கு ஒரு காகிதப் பென்சில் வேண்டும். அதை எங்கே வாங்கலாம் ?

தந்தை:—மணி ! இந்த ஒரு அணுவைக் கொண்டுபோய், நீயே விசாரித்து வாங்கிவா.

மணி:—சரி அப்பா !

(மணி போய்ச் சிறிது நேரத்திற்குப்பின், பென்சிலுடன் திரும்பி வருகிறுன்.)

தந்தை:—மணி ! ஏன் இவ்வளவு நேரம் ?

மணி:—அப்பா ! முதலில் ஒரு கடைக்குப் போனேன். அதில் பென்சில் இல்லையாம். அது நவதானியக் கடையாம். அங்கே நெல், உளுந்து, பயறு முதலியவைகள் இருக்கின்றன. பின்பு ஒரு கடைக்குப் போனேன். அது பழக்கடையாம். அதில் பலவிதமான பழங்கள் இருக்கின்றன. பிறகு இரும்புக்கடை, மரக்கடை இவைகளிலெல்லாம் கேட்டுவிட்டு கடைசியில் ஒரு கடையில் இதை வாங்கினேன். அந்தக் கடையில் பேனு, பென்சில், காகிதம், நோட்டு எல்லாம் விற்கிறது அப்பா !

தந்தை:—நல்லது, போவோம் வா!

மணி:—ஏன் அப்பா! ஜனங்கள் ஏன் மாலையில் சாமான்கள் வாங்க வருகிறார்கள்?

தந்தை:—மணி! மாலை குளிர்ந்த நேரம். தவிரவும் வேலை செய்பவர்கள் வேலையை முடித்துத் திரும்பும் நேரம் இதுதான். மாலையில்தான் கூலியாட்கள் கூலி வாங்கிச் சாமான் வாங்க வருவார்கள். மறுநாளுக்கு வேண்டிய சாமான்களை முதல்நாள் மாலையிலேயே வாங்கி வைத்துக்கொள்ளுவது நல்லது. இவைகளினால் மாலைவேளையில் கடைத்தெருவில் கூட்டம் அதிகமாய் இருக்கிறது.

மணி:—அப்பா! இன்று கடைகளைப்பற்றித் தெரிந்துகொண்டேன். வீட்டுக்குப் போகலாமா?

தந்தை:—சரி போகலாம் வா!

(போகிறார்கள்)

ஜனங்கள்—கூட்டம்—ஜவுளி—எல்லாம்—பலசரக்கு — தகரங்கள் — லட்டு—நேரம் — நவதானியம் — நோட்டு — கூலியாட்கள் — மறுநாள் — அதனால் — கேட்டு — விசாரித்து — திரும்பி —விற்கிறது.

பாடம்—33

புருவும் எறும்பும்

ஒரு குளக்கரையில் மரம் ஒன்று இருந்தது. அதில் ஒரு புரு கூடுகட்டி வசித்து வந்தது. அந்த மரத்தின் அடியில் ஒரு எறும்புப் புற்று இருந்தது. அதில் சில கட்டெறும்புகள் வசித்து வந்தன.

ஒரு நாள் அந்த எறும்புகள் குளக்கரை ஓரத்தில் இரை தேடிக் கொண்டிருந்தன. அப்பொழுது பலமான காற்று அடித்தது. ஒரு எறும்பு தவறித் தண்ணீரில் விழுந்தது. எறும்பு தண்ணீரில் நீந்த முடியாமல் தத்தளித்தது.



மரத்தில் இருந்த புரு இதைப் பார்த்தது. உடனே ஒரு இலையைப்பறித்து, எறும்பின் அருகில் கொண்டு போய்ப் போட்டது. இலை தண்ணீரின்மேல் மிதந்தது. எறும்பு மெதுவாய் அதில் ஏறிக் கொண்டது. சிறிது நேரத்தில் அந்த இலை எறும்போடு கரையை அடைந்தது. எறும்பும் உயிர் தப்பிக் கரை சேர்ந்தது.

பின் ஒரு நாள் புரு அந்த மரத்தின்மேல் உட்கார்ந்திருந்தது. அப்பொழுது அங்கு ஒரு வேடன் வந்தான். அழகான அந்தப் புருவை பார்த்தான். உடனே தன் வில்லே எடுத்தான். புருவின்மேல் அம்பு எய்யக் குறிவைத்தான்.

மரத்தடியில் இருந்த எறும்பு இதைப் பார்த்தது. புருவைக் காப்பாற்ற எண்ணியது. உடனே ஓடி வேடன் காலேச் 'சுரீர்' என்று கடித்தது. வேடனும் 'ஐயோ' என்று அலறினன். இந்தச் சப்தத்தைக்கேட்ட புரு பறந்து ஓடித் தப்பியது.

புரு எறும்புக்குச் செய்த உபகாரம் வீண் போகவில்லே. எறும்பைப் புரு காப்பாற்றியது. புருவை எறும்பும் காப்பாற்றியது. ஆகையால்,

உபகாரம் வீண்போகாது.

கரை—புற்று—கட்டெறும்பு—ஓரம்— இரை — குறி — உபகாரம் — தவறி—தப்பி—அருகில்—எய்ய—காப்பாற்ற—வீண்போக—தேடு — விழு — தத்தளி—பறி—மித—அடை—சேர்—எண்ணு—அலறு.

பாடம்—34

கிராமம்



தகப்பனர்:—மணி! இன்று நான் கிராமத்திற்குப் போய் வருகிறேன். வரும்போது உனக்கு வேண்டியதை வாங்கி வருகிறேன்.

மகன்:—அப்பா! கிராமம் என்றல் என்ன?

தகப்பனர்:—மணி! கிராமம் என்பது சிறிய ஊர். அதில் வீடுகள் குறைவாக இருக்கும். முன் பக்கத்தில் உள்ள கிராமத்தின் படத்தைப் பார்.

மகன்:—அப்பா! நடுவில் ஒரு கோபுரம் தெரிகிறதே. அது என்ன?

தகப்பனர்:—அதுதான் கிராமக்கோவில். அதற்கு நேரே பொதுச் சாவடி இருக்கிறது. சாவடிக்கு எதிரே ஊர்க் கிணற்றைப் பார். மற்றொரு பக்கத்தில் பள்ளிக்கூடம் இருக்கிறது. பிள்ளைகள் பள்ளிக்கூடம் போகிறர்கள் பார். இவைகளைச் சுற்றிலும் பல வீடுகள் இருக்கின்றன. அவைகளில் பல ஜாதியார் குடியிருக்கின்றர்கள்.

மகன்:—அப்பா! கிராமத்தைச் சுற்றிலும் என்ன இருக்கிறது?

தகப்பனர்:—கிராமத்தைச் சுற்றி வயல்கள், தோட்டங்கள் முதலியவை இருக்கின்றன. ஆடுமாடுகள் மேய்வதற்கு வேண்டிய புல்தரைகளும் உண்டு. ஒரு பக்கத்தில் ஒரு ஏரியும், இன்னொரு பக்கத்தில் ஒரு வாய்க்காலும் இருக்கின்றன.

மகன்:—இக்கிராமத்து ஜனங்கள் என்ன தொழில் செய்கிறர்கள்?

தகப்பனர்:—அவர்கள் எல்லோரும் நிலங்களை உழுது பயிரிட்டு ஜீவனம் செய்கிறர்கள். அதனல்தான் அவர்கள் மிகவும் நல்ல நிலைமையில் இருக்கிறர்கள். அவர்களுக்கு வேண்டிய பண்டங்களை வாங்கிக்கொள்ள சிறு கடை ஒன்றும் அங்கு உண்டு.

மகன்:—அப்பா! இந்தக் கிராமத்துக்கு என்னையும் கூட்டிப் போகிறீர்களா?

தகப்பனுர்:—மணி! அப்படியே போகலாம் வா.

மகன்:—அப்பா! கிராமத்துக்குப் போனல், அங்கே யார் வீட்டில் தங்கவேண்டும்?

தகப்பனுர்:—அந்தக் கிராமத்தின் அதிகாரி வீட்டுக்குத்தான் நாம் போகிரேம். அவரைக் கிராம முன்சீப் என்று சொல்லுவார்கள். நாம் கிராமத்துக்குப் போனதும் அவரைப்பற்றி அதிகம் கூறுகிறேன். முதலில் அங்குப் போவோம் வா.

மகன்:—சரி அப்பா!

கிராமம் — சாவடி — ஜாதியார் — புல்தரை—வாய்க்கால்—நிலங்கள்—ஜீவனம் — நிலைமை — அதிகாரி — கிராமமுன்சீப் —குறைவாக—பொது — சுற்றிலும்—கூட்டி—தங்க—தெரிகிறது—குடியிரு.

பாடம்—35

கதையும் பாட்டும்

வேலனும் கந்தனும்

வேலனும் கந்தனும் பள்ளிக்கூடம் புறப்பட்டார்கள். போகும் வழியில் ஒரு தோட்டம் இருந்தது. கந்தன் அங்கு நின்ருன். அப்பொழுது,

வேலன்:—கந்தா!

(பாட்டு—நொண்டிச்சிந்து)

செல்லுவோம் பள்ளிக்கூடம்—நாமே
சீக்கிரம் பொழுதினைப் போக்கிடாமல்

நேரம் ஆகிறது. பொழுது போக்காமல் பள்ளிக்கூடம் போவோம் வா.

கந்தன்:—வேலா !

(பாட்டு)

தோட்டம் இதற்குள்ளே—நாமே
நுழைந்திடுவோம் நல்ல பழங்களைப் பார் !
பார் நல்ல மாம்பழமே—இதனைப்
பறித்துத் தின்போம் நன்றாய் நறுக்கித் தின்போம்

அதோ பார் ! நல்ல மாம்பழங்கள். வா, நாம் சென்று மாம்பழம் பறித்துத் தின்போம்.

வேலன்:—கந்தா !

(பாட்டு)

நம்முடைய தோட்டமல்ல — இதனை
நாமே பறித்திடுதல் தீமையல்லவா ?
அந்நியர் தோட்டப்பழம் — பறித்தல்
ஆகும் திருட்டுத்தனம் ஆகையால் வேண்டாம்.

இது நம்முடைய தோட்டம் அல்ல. இன்னொருவர் தோட்டத்தில் நாம் பழத்தைப் பறித்தல் திருட்டுத்தனம் ஆகும். வேண்டாம் வா, போகலாம்.

கந்தன்:—வேலா !

(பாட்டு)

என்னடா உளறுகிறாய் ? இங்கே
யாரிருக்கிறார் ? வயிறாரத் தின்னலாம்.

என்னடா உளறுகிறாய். நாம் இரண்டு பழங்கள் பறித்துத் தின்றால், யார் பார்க்கப் போகிறார்கள் ?

வேலன்:—கந்தா ! அப்படிச் சொல்லாதே.

(பாட்டு)

ஒருவரும் இல்லை யென்றால் — கடவுள்
ஒருவர் பார்த்துக்கொண்டே இருப்பாரென்று
ஆசிரியர் சொல்லவில்லையா ?—இதை விட்டு
ஆனந்தமாய்ப் பள்ளிக்கூடம்தானே செல்லுவோம்.

'கடவுள் நாம் செய்வதை யெல்லாம் பார்த்துக் கொண்டே இருப்பார்' என்று நம் உபாத்தியாயர் சொல்ல வில்லையா? வா, சந்தோஷமாய்ப் பள்ளிக்கூடம் போவோம்.

கந்தன்:—

(பாட்டு)

நல்லது நீ வரவேண்டாம்—பழத்தை
நான் பறித்துத் தின்ற பின்புதான் திரும்புவேன்.

சரி ! நீ வராவிட்டால் போ. நான் பழம் பறித்துத் தின்று விட்டுத்தான் வருவேன்.

கந்தன் தோட்டத்துக்குள் நுழைந்து மாம்பழம் பறிக்கிருன். தோட்டக்கார முருகன் அவனைப் பிடித்து வேலனிடம் இழுத்து வருகிருன்.

முருகன்:—

(பாட்டு)

இங்கே நீங்கள் பேசியதை—நானே
இப்போது கேட்டிருந்தேன் தப்பாமலே
வாருங்கள் பள்ளிக்கூடம்—உங்கள்
வாத்தியாயரிடம் கூறிப் பார்த்து விடுவேன்.

நீங்கள் பேசியதை யெல்லாம் நான் கேட்டேன். உங்கள் வாத்தியாயரிடம் வாருங்கள். அவரிடம் கூறி, அவர் என்ன செய்கிருர் என்று பார்ப்போம்.

மூவரும் பள்ளிக்கூடம் போகிருர்கள். முருகன் உபாத்தியாயரிடம் சென்று,

(பாட்டு)

கந்தன் மிகக் கெட்டவன் ஐயா !—இன்று
எந்தன் தோட்டத்துள் நுழைந்து தொந்தரை செய்தான்.

ஐயா ! கந்தன் இன்று என் தோட்டத்துள் நுழைந்து மாம்பழம் திருடிவிட்டான். அதை விசாரியுங்கள்.

உபாத்தியாயர்: —கந்தா! இது உண்மைதானு ?

கந்தன்:— ஆம் ஐயா !

உபாத்தியாயர்:—கந்தா நீ செய்தது மிகவும் கெட்ட காரியம். ‘பிறர்பொருளைத் திருடக்கூடாது’ என்று நான் சொல்லியது தெரியாதா? இனிமேல் இப்படிச் செய்வாயா ?

கந்தன்:— இனிமேல் இப்படிச் செய்யமாட்டேன் ஐயா !

உபாத்தியாயர்:— வேலா ! நீயும்கூடச் சேர்ந்தவன்தானே ?

முருகன்:—

(பாட்டு)

வேலன் மிக நல்லவன் ஐயா !—கந்தனுக்கு
வேண்டிய புத்தியைச் சொல்லி வேண்டினுன் ஐயா!
அவனுக்குப் பரிசாக—மாம்பழம்
அளித்திடுவேன் நான் உளமகிழ்ந்தே.

ஐயா ! வேலன் எவ்வளவு புத்தி சொல்லியும் கந்தன் கேட்கவில்லை. வேலன் மிகவும் நல்லவன். அவனுக்கு இந்த் மாம்பழத்தைப் பரிசாகக் கொடுக்கிறேன்.

முருகன் மாம்பழத்தை வேலனிடம் கொடுக்கிருன். வேலன் பழத்தை உபாத்தியாயரிடம் கொடுக்கிருன்.

உபாத்தியாயர்:— பிள்ளைகளே ! நல்ல பையனுன வேலனுக்குக் கிடைத்த பழத்தை நீங்கள் எல்லோரும் சாப்பிடுங்கள். மாம்பழம் எப்படி நல்ல ருசியாய் இருக்கிறதோ, அதுபோல் எல்லோரும் நல்ல பிள்ளையாய் இருக்க வேண்டும்.



அப்பியாசம்—16 படப் பழக்கம்—8





(1) ஊசியில் நூலுடன். (2) ஊசியில் நூல் கோக்கும் விதம். (3) இரண்டு துணிகளைச்சேர்த்து ஊசியால் தைக்க ஆரம்பித்தல். (4, 5) முதலில் குத்தின இடத்திலேயே மறுபடியும் குத்தி, முடிபோட ஆரம்பித்தல்... (6) ஊசியாலேயே முதலில் முடிச்சுப் போடுதல். (7) கோக்குப் போடுதல். (8) உருட்டித் தைத்தல்.

ஆத்திசூடி

ஆத்திசூடி அமர்ந்த தேவனை
எத்தி எத்தி தொழுவோம் யாமே.

1. அறஞ்செய விரும்பு.
2. ஆறுவது சினம்.
3. இயல்வது கரவேல்.
4. ஈவது விலக்கேல்.
5. உடையது விளம்பேல்.
6. ஊக்கமது கைவிடேல்.
7. எண்ணெழுத் திகழேல்.
8. எற்ப திகழ்ச்சி.
9. ஐய மிட்டுண்.
10. ஒப்புர வொழுகு.
11. ஓதுவ தொழியேல்.
12. ஔவியம் பேசேல்.
13. அஃகஞ் சுருக்கேல்.
14. கண்டொன்று சொல்லேல்.
15. ஙப்போல் வளை.
16. சனி நீராடு.
17. ஞயம் பட உரை.
18. தந்தைதாய்ப் பேண்.
19. நன்றி மறவேல்.
20. பருவத்தே பயிர்செய்.
21. மீதூண் விரும்பேல்.
22. வல்லமை பேசேல்.